# தினசரி நடப்பு நிகழ்வுகள்

**Useful For**

* TNPSC
* Police
* Bank Exams

மார்ச்

**09**

**09-03-2021**



தினகரன் | தி இந்து | தினத்தந்தி | தினமலர் | தினமணி

We Shine Academy™
guiding you to get through

# உலக செய்திகள்

We Shine Academy Guiding you to get through

- இஸ்ரேலை சேர்ந்த ஸ்டோர்டாட் என்ற ஸ்டார்ட் அப் நிறுவனம் முதல் தலைமுறை லித்தியம் அயன் பேட்டரியை உருவாக்கியுள்ளது. இந்த பேட்டரி முழுவதுமாக சார்ஜ் ஆக 5 நிமிடங்களே ஆகும் என ஸ்டார்ட் அப் நிறுவனர் டோரன் மயர்ஸ்டார்ஃப் கூறுகிறார்.

- வங்கதேசத்தின் 50வது சுதந்திர தின விழாவில் பங்கேற்க பிரதமர் மோடி 26ம் தேதி டாக்கா செல்கிறார். பாகிஸ்தானின் ஒரு பகுதியாக இருந்து கிழக்கு பாகிஸ்தான் 1971ல் பிரிந்து தனி வங்கதேசம் என்ற பெயரில் தனிநாடாக உருவானது வங்கதேசம் உருவாக பாகிஸ்தானுடன் போரிட்டு இந்திய ராணுவம் முக்கியப் பங்காற்றியது.
  - கரோனா பரவலுக்கு பிறகு பிரதமர் மோடி வெளிநாடு செல்லவில்லை. 15 மாதங்களுக்கு பிறகு மோடி வெளிநாடு செல்வது இதுவே முதல்முறை.

- மத்திய ஆப்ரிக்க நாடான டி.ஆர்.காங்கோவில் ஒரு மலையிலுள்ள மண்ணில் பெருமளவு தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
  - டி.ஆர்.காங்கோவின் தெற்கு கிவு மாகாணத்தில் லுகிகி என்ற கிராமத்திலுள்ள மலையிலுள்ள மண்ணில் 60 முதல் 90% வரை தங்கத்தாது இருப்பதை உள்ளூர் வாசிகள் கண்டுபிடித்துள்ளனர்.

# தேசிய செய்திகள்

We Shine Academy Guiding you to get through

- மார்ச் 7 அன்று ஜான் ஆஷாதி திவாஸை முன்னிட்டு தேசிய தலைநகர் டெல்லியின் அசோக் விஹாரில் ஜான் ஆஷாதி மையத்தை மத்திய சுகாதார துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன் திறந்து வைத்தார்.
  - பிரதமர் மோடி மார்ச் 7, 2019ல் ஜான் ஆஷாதி திவாஸை அறிவித்தார்.
  - ஜான் ஆஷாதி திவாஸின் கருப்பொருள் 2021 - "சேவா-பி - ரோஸ்கர் பீ"

- இந்திய மருத்துவர்கள் சங்கத்தின் (ஏபிஐ) 76வது ஆண்டு மாநாட்டில் மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கலந்து கொண்டு உரையாற்றினார்.
  - ஏபிஐ மாநாட்டின் கருத்துரு: "ஈடுபாட்டு மனம் : மருத்துவத்தை மேம்படுத்தல்"

- தேசிய வணிகக் கழகம் (NPCI) மற்றும் எஸ்பிஐ பேமென்ட்ஸ் இணைந்து இந்திய வணிகர்களுக்காக "RuPay SoftPos" தொடங்கின.
  - "RuPay SoftPos" தீர்வு சில்லறை விற்பனையாளர்களுக்கான என்.எப்.சி இயக்கப்பட்ட ஸ்மார்ட் போன்களை வணிக பாயிண்ட் ஆ·.ப் சேல் (Pos) டெர்மினல்களாக மாற்றும் திறன் கொண்டுள்ளது.

- இந்தியாவின் வெளி விவகார துறை அமைச்சர் டாக்டர் ஜெயசங்கர் இந்திய தூதரகத்தின் புதிய கலாச்சார மையத்தை டாக்காவில் திறந்து வைத்தார். இது இந்திய தூதரகத்தில் 2வது கலாச்சார மையமாகும்.
    - டாக்காவில் உள்ள இந்திரா காந்தி கலாச்சார மையத்தில் தன்மொண்டி மையம் முதலாவதாகும்.

- "உணவு விரயக் குறியீடு 2021" என உணவு விரயம் தொடர்பான ஆய்வறிக்கை ஒன்றை ஐ.நா. வெளியிட்டுள்ளது. உலகளாவிய அளவில் 2019ம் ஆண்டு 9.31 கோடி டன் அளவில் உணவுகள் விரயம் செய்யப்பட்டுள்ளன.
  - இதில் 61% வீடுகளிலிருந்தும், 26% உணவு விடுதிகளிலிருந்தும், 13% சில்லறை விற்பனையின் மூலமும் விரயம் ஆகியிருப்பதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - இந்தியாவில் தனிநபர் ஆண்டுக்கு 50 கிலோ உணவை விரயம் செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- மகளிர் தினத்தை முன்னிட்டு அமெரிக்க காங்கிரஸ் ஆலோசனை பணிக்குழு சார்பில் 2020ம் ஆண்டுக்கான சர்வதேச தலைசிறந்த 20 பெண்கள் விருது வழங்கும் விழா நடைபெற்றது.
  - இதில் உலகிலுள்ள 20 பெண்களுக்கு விருது அளிக்கப்பட்டது. இதில் தெலுங்கானா ஆளுநர் தமிழசை சௌந்தரராஜனுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# தமிழகச் செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியில் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை தலைவராக பணியாற்றி ஓய்வு பெற்றவரும், அனைத்திந்திய அறிவியல் தமிழ் கழகத் தலைவரும், அறிவியல் தமிழறிஞருமான இராம சுந்தரம் உடல் நலக் குறைவால் மார்ச் 8ல் காலமானார்.
  - நேஷனல் புக் டிரஸ்ட், சாகித்ய அகாடமி உள்ளிட்ட பதிப்பகங்களிலும், தமிழ்ப் பல்கலைக் கழகம் மற்றும் இதர பல்கலைக்கழகங்களிலும் 10க்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார்.

- முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் மூத்த சகோதரர் முகம்மது மீரா மரைக்காயர் மார்ச் 7 அன்று காலமானார்.

- தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரியத்துக்கு புதிதாக உபதலைவர் மற்றும் புதிய அலுவல் சாரா உறுப்பினர்களை நியமித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
  - ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரை தலைவராகவும், ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி கோவிந்தராஜை உபதலைவராகவும், அலுவல் சார்ந்த மற்றும் அலுவர் சாரா உறுப்பினர்களை கொண்டு தூய்மை பணியாளர் நலவாரியம் செயல்படும்.
  - தூய்மை பணியாளர் நலவாரியமானது ஒரு முதல் நிலை குழுவாக செயல்படும். இந்த வாரியத்தின் உபதலைவர் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிகாலம் 3 ஆண்டுகள்.

- புதுக்கோட்டையில் 100 சதவிகித வாக்குப் பதிவுக்கான வாக்காளர் விழிப்புணர்வுக்காக, வாக்காளர் விழிப்புணர்வு மராத்தான் ஓட்டம் நடைபெற்றது.

- பொதுத்துறை நிறுவனங்கள் உள்பட 44 இந்திய நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து ராணுவ தளவாடப் பொருள்களை உற்பத்தி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

- நாதுராம் கோட்சே, நாராயண் ஆப்தே தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த மார்ச் 15ம் தேதி மத்தியப் பிரதேச மாநிலம் குவாலியரில் இருந்து தில்லிக்கு வாகப் பேரணி நடத்த இருப்பதாக அகில இந்திய ஹிந்தி மகா சபை அறிவித்துள்ளது. கோட்சே, ஆப்தே இருவரும் மகாத்மா காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- மேட்டியோ பெலிகோன் ரேங்கிங் சர்வதேச மல்யுத்த போட்டியில் ஆடவருக்கான 65 கிலோ எடைபிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் பஜ்ரங்புனியா தங்கப்பதக்கம் வென்றார். இதன் மூலம் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.
  - மற்றொரு இந்திய வீரரான விஷால் காளிரமணா 70 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

- மேட்டியோ பெலிகோன் ரேங்கிங் சர்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்தியா 3 தங்கம், 4 வெண்கலம் என மொத்தம் 7 பதக்கங்கள் வென்று நிறைவு செய்தது.
  - மகளிர் பிரிவில் வினேஷ் போகத் தங்கம் பதக்கமும், சரிதா மோர் வெள்ளிப்பதக்கமும் வென்றிருந்தனர். ஆடவர் பிரிவில் நீரஜ், குல்தீப் மாலிக், நவீன் ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றிருந்தனர்.

- ஏடிபி தரவரிசை வரலாற்றில் அதிக வாரங்களில் முதல்நிலை வீரராக இருந்தவர் என்கிற பெருமையையுடைய ரோஜர் பெடரரின் சாதனையை தற்போது ஜோகோவிச் முறியடித்துள்ளார்.
  - புதிய ஏடிபி தரவரிசையில் ஜோகோவிச் முதலிடத்திலும், நடால் 2ம் இடத்திலும், ∴பெடரர் 6ம் இடத்திலும் உள்ளனர்.
  - ∴பெடரரின் 310 வாரங்கள் முதல் நிலை வீரராக இருந்த சாதனையை, ஜோகோவிச் 311 வாரம் இருந்து முறியடித்துள்ளார்.

# Expected Questions

We Shine Academy
Guiding you to get through

1. ஸ்டோர்டாட் என்ற ஸ்டார்ட் அப் நிறுவனம் உருவாக்கியுள்ள முதல் தலைமுறை லித்திய அயன் பேட்டரி முழுவதுமாக சார்ஜ் ஆக எத்தனை நிமிடங்கள் எடுத்துக்கொள்ளும்?

விடை: 5 நிமிடங்கள்

2. எந்த ஆண்டு கிழக்கு பாகிஸ்தான் பிரிந்து வங்கதேசம் என்ற பெயரில் தனிநாடாக உருவானது?

விடை: 1971

3. ஜான் ஆஷாதி திவாஸை முன்னிட்டு அசோக் விஹாரில் ஜான் ஆஷாதி மையத்தை யார் திறந்து வைத்தார்?

விடை: மத்திய சுகாதார துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன்

We Shine Academy
Guiding you to get through

4. 2021ம் ஆண்டுக்கான ஜான் ஆஷாதி திவாஸின் கருப்பொருள் என்ன?

விடை: "சேவா-பி - ரோஸ்கர் பீ"

5. இந்திய மருத்துவர்கள் சங்கத்தின் 76வது ஆண்டு மாநாட்டின் கருத்துரு என்ன?

விடை: “ஈடுபாட்டு மனம் : மருத்துவத்தை மேம்படுத்தல்”

6. இந்திய வணிகர்களுக்காக “RuPay SoftPos” - ஐ எந்த அமைப்பு தொடங்கியது?

விடை: தேசிய வணிகக் கழகம் (NPCI) மற்றும் எஸ்பிஐ பேமென்ட்ஸ்

We Shine Academy Guiding you to get through

7. டாக்காவில் இந்திய தூதரகத்தின் புதிய கலாச்சார மையத்தை யார் திறந்து வைத்தார்?

விடை: வெளி விவகார துறை அமைச்சர் டாக்டர் ஜெயசங்கர்

We Shine Academy Guiding you to get through

8. ஐ.நா. வெளியிட்டுள்ள “உணவு விரயக் குறியீடு 2021” என்ற ஆய்வறிக்கையின் படி 2019 ஆண்டு எவ்வளவு உணவு விரயம் செய்யப்பட்டுள்ளன?

விடை: 9.31 கோடி டன்

9. மகளிர் தினத்தை முன்னிட்டு சர்வதேச தலைசிறந்த 20 பெண்கள் விருது வழங்கும் விழா எந்த அமைப்பு சார்பில் நடைபெற்றது?

விடை: அமெரிக்க காங்கிரஸ் ஆலோசனை பணிக்குழு

10. அறிவியல் தமிழறிஞர் இராம சுந்தரம் என்று காலமானார்?

விடை: மார்ச் 8

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

11. முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் மூத்த சகோதரர் முகம்மது மீரா மரைக்காயர் என்று காலமானார்?

விடை: மார்ச் 8

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

12. தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரியத்தின் உபதலைவர் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிகாலம் எத்தனை ஆண்டுகள்?

விடை: 3 ஆண்டுகள்

13. மேட்டியோ பெலிகோன் ரேங்கிங் சர்வதேச மல்யுத்த போட்டியில் ஆடவருக்கான 65 கிலோ எடைபிரிவில் தங்கம் வென்றவர் யார்?

விடை: இந்தியாவின் பஜ்ரங்புனியா

14. மேட்டியோ பெலிகோன் ரேங்கிங் சர்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்தியா எத்தனை பதக்கங்கள் வென்றுள்ளது?

விடை: 7 பதக்கங்கள்

15. ஏடிபி தரவரிசை வரலாற்றில் அதிக வாரங்களில் முதல்நிலை வீரராக இருந்தவர் என்கிற பெருமையையுடைய ரோஜர் பெடரரின் சாதனையை தற்போது யார் முறியடித்துள்ளார்?

விடை: ஜோகோவிச்

# March 8th Quiz Questions and Answers

நமது தேசிய சின்னத்தில் உள்ள வாசகம் என்ன?

a) வந்தே மாதரம்

b) வாய்மையே வெல்லும்

c) ஜெய்ஹிந்த்

d) ரகுபதி ராகவ ராஜாராம்

We Shine Academy Guiding you to get through

உயர்நீதிமன்றம் உள்ள யூனியன் பிரதேசம் எது?

a) பாண்டிச்சேரி

b) டெல்லி

c) டையூரு டாமன்

d) அந்தமான் & நிக்கோபர்

இந்திய பிரதமர் ஆகக் கூடிய தகுதி வயது என்ன?

a) 21 வயது

b) 25 வயது

c) 30 வயது

d) 35 வயது

We Shine Academy
Guiding you to get through

உலகின் மிகப் பெரிய பவளத் தொடர் எங்கு அமைந்துள்ளது?

a) ஆர்டிக் பெருங்கடல்

b) அண்டார்டிக் பெருங்கடல்

c) இந்தியப் பெருங்கடல்

d) பசிபிக் பெருங்கடல்

We Shine Academy Guiding you to get through

உலகின் மிக அதிக தண்ணீரை கொண்டு வரும் நதி எது?

a) நைல்

b) பிரம்மபுத்திரா

c) அமேசான்

d) யாங்சே

# Today Quiz

We Shine Academy
Guiding you to get through

தமிழ்நாட்டில் **NH47** நெடுஞ்சாலை

**a)** சேலம் முதல் கன்னியாகுமரி வரை

**b)** மதுரை முதல் இராமேஸ்வரம் வரை

**c)** நாகப்பட்டினம் முதல் கோயம்புத்தூர் வரை

**d)** சென்னை முதல் தேனி வரை

வடக்கு-தெற்கு காரிடர் மற்றும் கிழக்கு-மேற்கு காரிடர் இணையும் இடம்

a) போபால்

b) ஆக்ரா

c) ஜான்சி

d) நாக்பூர்

தொல்லுயிர் எச்சங்கள் உருவாவதற்கு உகந்த சூழல்

a) கடல்

b) ஏரி

c) நிலப்பரப்பு

d) நிதி

We Shine Academy Guiding you to get through

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளநராக இருக்க முடியுமா?

a) இருக்கலாம்

b) இருக்க முடியாது

c) 6 மாதங்கள் மட்டும்

d) மூன்று மாதங்கள் மட்டுமே

We Shine Academy
Guiding you to get through

நமது தேசியக் கொடியை அரசியலமைப்பு சபை அங்கீகரித்த ஆண்டு

a) 1947 ஜீலை 22

b) 1948 ஜீலை 22

c) 1945 ஆகஸ்டு 15

d) 1947 ஆகஸ்டு 15

## திருக்குறள்

“செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது”

**விளக்கம்:**

தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

We Shine Academy Guiding you to go through

# மிக்க நன்றி

We Shine Academy
Guiding you to get through